**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.**

S.C.No.217/2022

Deposition of witness for Prosecution – PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சித்தநாதன் | Caste | : |
| S/o. | : ஆனந்தன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 02.07.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் செட்டிப்பட்டி வன்னியர் தெருவில் குடியிருக்கிறேன். எனக்கு திருமணம் ஆகி குழந்தைகள் இருக்கிறார்கள். வழக்கில் இறந்துபோனவர் ஆனந்தன். அவர் என்னுடைய அப்பா ஆவார். அவர் சுடலை காளியம்மன் கோவிலில் 30 ஆண்டுகளாக பூஜை செய்து வந்தார். தினசரி என்னுடைய அப்பா கோவிலில் படுத்து தூங்குவார். என் அப்பா இறப்பதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்னர் விறகு உடைக்கும் இயந்திரத்தை காளியப்பன், ராமலிங்கம், காத்தவராயன் ஆகியோருடன்

சேர்ந்து வாங்கி தொழில் செய்து வந்தார்கள். மேற்படி தொழிலில் வரவு செலவில் பிரச்சனை ஏற்பட்டதால் காத்தவராயன் தொழிலிருந்து விலகிக்கொண்டார். ஆஜர் எதிரிதான் காத்தவராயன் ஆவார்.

தலா ரூ.90,000/– முதலீடாக போட்டதில் ஆஜர் எதிரிக்கு ரூ.5,000/– கூடுதலாக போட்டு ரூ.95,000/– கொடுத்து கூட்டிலிருந்து விலகி விட்டார். ஆஜர் எதிரியிடம் என்னுடைய தகப்பனார் மாத சீட்டு போட்டு வந்தார். ஆஜர் எதிரி சரிவர சீட்டை நடத்தாமல் சந்தாதாரர்களுக்கு சரிவர பணம் கொடுக்கவில்லை. விறகு உடைக்கும் வண்டி போட்டதிலிருந்து என் அப்பாவிற்கும் ஆஜர் எதிரி போர்மன்னனுக்கும் முன்விரோதம் இருந்தது. ஏல சீட்டு நடத்தியதிலும் ஆஜர் எதிரிக்கும் என் அப்பாவிற்கும் பகை இருந்தது.

ஆஜர் எதிரியின் மனைவி துணி துவைப்பதற்காக கிணற்றுக்கு சென்றவர் கிணற்றில் தவறி விழுந்து இறந்துவிட்டார். என்னுடைய அப்பா கோவில் பூசாரியாக இருந்ததால், நீ தான் பில்லி சூனியம் வைத்து ஆஜர் எதிரியின் மனைவியை கொன்றுவிட்டதாக என் அப்பாவிற்கும் ஆஜர் எதிரிக்கும் விரோதம் இருந்து வந்தது. அடிக்கடி என்னுடைய அப்பாவை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிக்கொண்டு இருந்தார்.

05.03.2022ம் தேதி இரவு 9.00 மணி அளவில் என் தகப்பனார் வீட்டில் இருந்தார். அதற்கு பிறகு கோவிலுக்கு என் அப்பா சென்றுவிட்டார். அன்று இரவு சுமார் 10.30 மணி அளவில் நானும், என்னுடைய மாமா ஆனந்தனும், கோவில் பின்புறம் உள்ள பொது

கழிப்பிடத்திற்கு சென்றோம். அப்போது ஆஜர் எதிரி ஒரு மஞ்சள் வேட்டி கட்டிக்கொண்டு கையில் ரத்தக்கறை படிந்த அருவாளுடன் எங்களுக்கு முன்னால் கோவில் பக்கமிருந்து வந்தார். அவர் வந்ததை அங்கிருந்த தெரு விளக்கு வெளிச்சத்தில் நாங்கள் பார்த்தோம். நானும் என்னுடைய மாமாவும் என்ன என்று தெரியவில்லை என்று கோவிலுக்கு சென்று பார்த்தோம். என்னுடைய அப்பா ரத்த வெள்ளத்தில் கை, முதுகு, கால், கழுத்து, தலை, ஆகிய இடங்களில் வெட்டுப்பட்டு கிடந்தார். அப்போது என் அப்பா உயிருடன் இல்லை.

எனக்கு எழுதப்படிக்க தெரியாததால் என் பக்கத்து வீட்டுக்காரர் காஸ்ட்ரோ என்பவரை காவல் நிலையம் அழைத்து சென்று புகார் வாக்குமூலத்தை எழுதி உதவி ஆய்வாளரிடம் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் அளித்த புகார்தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆகும். எதிரியை நான் பார்க்கும்போது கொண்டு சென்ற அருவாளை என்னால் காண்பிக்க முடியும். மேற்படி அருவாள் சா.பொ.1 ஆகும். எதிரி அணிந்திருந்த மஞ்சள் துண்டு சா.பொ.2 ஆகும்.

சுமார் 1 மணி நேரம் கழித்து கோவிலுக்கு வந்து ஆய்வாளர் விசாரித்தார். மீண்டும் பிரேதத்தை வைத்து என்னை விசாரித்தார்கள். மீண்டும் ஒரு வாரம் கழித்து என்னை ஆய்வாளர் விசாரித்தார். ஆய்வாளரிடம் எனக்கு தெரிந்த விவரங்களை சொன்னேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

கோவில் தனிப்பட்ட கோவில் இல்லை, ஊர் பொதுக்கோவில்

என்றால் சரி. கோவில், தேவூர் காவல்நிலையத்திலிருந்து 4 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரியல்ல, 3 கிலோமீட்டர் தூரம்தான் இருக்கும். செட்டிப்பட்டி மெயின் ரோட்டில் இருபுறமும் கடைகள், வீடுகள் நிறைய உள்ளன என்றால் சரி. அங்கு ஆள் நடமாட்டம் எந்நேரமும் இருந்து கொண்டே இருக்கும் என்றால் சரி. என்னுடைய வீடு அடுக்குமாடி வீடு, அதில் கழிப்பிட வசதி உள்ளது என்றால் இல்லை. என்னுடன் வந்த மாமா ஆனந்தன் வீட்டில் கழிப்பிட வசதி உள்ளதா என்றால் இல்லை. ஆண்கள் பொது கழிப்பிடம் கோவிலை தாண்டி ஊருக்கு வெளிப்புறம் ஒதுக்குபுறமாக உள்ளது என்றால் சரி.

கோவில், தைலாக்காரன் காடு செல்லும் ரோட்டில் உள்ளது என்றால் சரி. செட்டிப்பட்டி மெயின் ரோட்டிலிருந்து கிழக்கே பிரிந்து தான் தைலாக்காரன் காடு செல்லும் ரோட்டில் வடக்குபார்த்தவாறு கோவில் உள்ளது என்றால் சரி. கோவிலில் ஊர் பொது மக்கள் அனைவருக்கும் பாத்தியம் உண்டு என்றால் சரி. தைலாக்காரன் காடு செல்லும் பாதை சரபங்கி நதியின் தரைப்பாலம் வழியாகதான் செல்ல வேண்டும் என்றால் சரி. தரைப்பாலத்தை தாண்டி, எங்களது குலதெய்வம் பெரியாண்டிச்சி கோவில் தாண்டி எதிரியின் வீடு உள்ளது என்றால் சரி. எதிரியின் வீட்டை தாண்டிதான் கோவில் கட்டுமானம் செய்த பங்காளி செல்வராஜ் வீடு உள்ளது என்றால் சரி. கோவிலுக்கும் எதிரியின் வீட்டிற்கும் சுமார் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரி. என் வீட்டிற்கும் கோவிலுக்கும் 1 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரியல்ல, 200 மீட்டர் தூரம்தான் இருக்கும். கோவில்

செட்டிப்பட்டி மெயின் ரோட்டிலிருந்து கிழக்கே முதலில் மாரியம்மன் கோவிலும், அடுத்து அரசு பள்ளியும், அதை அடுத்து சரபங்கி கரை ஓரத்தில் அமைந்துள்ளது, கோவில் ஆற்றுபுறம்போக்கில் அமைந்துள்ளது என்றால் சரி.

கோவிலுக்கும் தைலாக்காரன் ரோட்டிற்கும் வடக்கே பள்ளத்தில் எங்கள் கோவிலும், ரோட்டை தாண்டி தெற்கே உயரத்தில் பெரியாண்டிச்சி கோவிலும், அதை அடுத்து கிறிஸ்டியன் சுடுகாடும், அதை அடுத்து ஆண்கள் பொது கழிப்படமும் உள்ளது என்றால் சரி. போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தபோது பொதுமக்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 30 பேர் இருந்தார்கள். அந்த 30 பேர்களில் போலிசார் யார் யாரை விசாரித்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. என் அம்மா, மற்றும் என் மனைவி மற்றும் என் குழந்தைகளை போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். சம்பவ இடத்தை போலிசார் போட்டோ எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். 32 அடி உயர துர்கை சுடலை காளியம்மன் சிலைக்கு கீழ் ஒரு அறை உள்ளது என்றால் சரி. அந்த அறையில், கட்டில், பெட்சீட், மிக்சி, அம்மிக்கல் ஆகியவை இருக்கும் என்றால் சரியல்ல. எந்த பொருளும் இல்லை. அந்த அறை சும்மாதான் இருக்கும். அந்த அறையில் யாரும் தங்குவதில்லை, பூஜை சாமான்கள் மட்டும் வைக்கப்படும்.

நான் கோவில் அருகே மரக்கரி சூளை வைத்து மரக்கரி வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரி. தற்போது பூசாரியாக இருந்து கொண்டு அதே வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரி. என் அம்மா, என்

அப்பா இருக்கும் வரை அந்த கோவிலில்தான் பூஜை சாமான்கள், தேங்காய் கடை வைத்து நடத்தி வந்தார் என்றால் சரி. என் அப்பா உயிருடன் இருக்கும் வரை காலை, மதியம், இரவு 3 கால பூஜையும் செய்து வருவார் என்றால் சரி. 3 கால பூஜையும் முடிந்தபிறகு என் அம்மா பூஜை சாமான்களை எடுத்து வைத்துவிட்டுதான் வீட்டிற்கு செல்வார் என்றால் சரி. என் அப்பா வீட்டிற்கு வந்து சாப்பிட்டு விட்டு கோவிலுக்கு சென்று தங்கிவிடுவார்.

கோவிலுக்கு சென்னை, பெங்களூர், கோவை, எடப்பாடியிலிருந்து பக்தர்கள் நிறைய வருவார்கள் என்றால் சரி. சில சமயம் இரவு நேரங்களில் பூஜை முடிய இரவு 10 மணி ஆகும் என்றால் சரியல்ல.

என் அப்பாவுடன் என் அம்மாவும் கோவிலில் எப்போதும் இருப்பார் என்றால் சரியல்ல. என் அப்பா இருந்த வரை அவர் பேய் ஓட்டுவார் என்றால் இல்லை. என் அப்பா பில்லி, சூனியம் வைப்பார் என்றால் இல்லை. என் அப்பா குறி சொல்வாரா என்றால் சொல்வார். நான் பூசாரியாக கோவிலில் என்ன வேலை செய்கிறேன் என்றால் குறி பார்ப்பேன், பூஜை செய்வேன்.

என் அப்பா இருந்தவரை அம்மாவாசை அன்றும் மற்றும் விசேச காலங்களில் ஆடு, கோழி, பன்றி மூன்றும் வெட்டி பூஜை செய்து அங்கேயே சமைத்து சாப்பிடுவார் என்றால் சரியல்ல. வருடம் ஒரு முறை மட்டும் செய்வார். எப்போது செய்வார் என்றால் ஆனி மாதம் அவ்வாறு செய்வார்.

போன அம்மாவாசை அன்று பெங்களூரிலிருந்து தண்டபானி என்பவர் அங்கிருந்து கோவிலுக்கு பக்தர்களை டெம்போ டிராவலரில் கோவிலுக்கு அழைத்து வந்து பன்றி, ஆடு, கோழி வெட்டி பூஜை செய்தேன் என்றால் சரி. அன்று இரவு பன்றி, கோழி வெட்டி அங்கேயே சமைத்து சாப்பிட்டுவிட்டு இரவு கோவிலில் தங்கி அடுத்த நாள் காலையில் கிடா வெட்டி சமைத்து அங்கேயே சாப்பிட்டுவிட்டு அனைவரும் அன்று இரவு 11.00 மணிக்கு பெங்களூர் சென்றார்கள் என்றால் சரி.

என் அப்பா, எதிரி, காளியப்பன், ராமலிங்கம், ஆகிய 4 பேரும் 2 டிராக்டர்கள் வாங்கி 2 கட்டை உடைக்கும் மெசின்கள் வாங்கி வியாபாரம் செய்தார்கள், அப்போது எதிரியின் மனைவி இறந்துவிட்டதால் 3 குழந்தைகளை வைத்துக்கொண்டு என்னால் தொழில் செய்ய முடியாது என்று எதிரி கூட்டிலிருந்து விலகிக்கொண்டார் என்றால் சரியல்ல. இரண்டு டிராக்டர்களில் ஒரு டிராக்டர் மற்றும் ஒரு கட்டை உடைக்கும் மிசினை நான் எடுத்துக்கொண்டேன் என்றால் சரி. அதே வண்டியில் கட்டை உடைக்கும் மிசினை விற்றுவிட்டு அந்த வண்டியில் டிரைலர் போட்டு விறகு உடைக்கும் வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரி.

சம்பவ இடத்திற்கு போலிசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் இரவு 1.30 மணிக்கு வந்தார்கள். நான் காவல்நிலையம் சென்றபோது ஆய்வாளர் இருந்தாரா என்றால் இருந்தார். நான் ஆய்வாளரிடம்தான் புகார் கொடுத்தேன் என்றால் சரி. நான் என்ன

வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்கத் தெரியாது என்றால் சரி. புகாரை போலிசார் எனக்கு படித்து காண்பித்தார்களா என்றால் படித்து காண்பித்தார்கள். நான் சொல்லச்சொல்லதான் புகார் எழுப்பட்டதா என்றால் ஆம். புகாரில் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் நான் மட்டும்தான் கையெழுத்து செய்தேன். காஸ்ட்ரோ என்பவரை போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை, என்னை மட்டும்தான் விசாரித்தார்கள்.

ஆய்வாளர் என்னுடன் சம்பவ இடத்திற்கு வந்தாரா என்றால் வரவில்லை. நான் முன்னர் சென்றுவிட்டேன், அதன் பின்னர்தான் ஆய்வாளர் வந்தார். காவல்நிலையத்திற்கு யாருடைய இருசக்கர வாகனத்தில் சென்றோம் என்றால் காஸ்ட்ரோவின் இருசக்கர வாகனத்தில் சென்றோம். தேவூர் காவல்நிலையம் 3 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது என்பதால் 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். ஆனால் நான் 10 நிமிடத்தில் போகவில்லை. ஏன் தாமதமாக காவல்நிலையம் சென்றேன் என்று புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் காரணம் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் பல முறை பிரச்சனை செய்தார் என்று கூறி இருக்கிறேன், ஆனால் நான் ஒரு முறைகூட காவல்நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரி.

எதிரி சீட்டு நடத்தினார், அந்த பணத்தை கொடுக்கவில்லை என்று போலிஸ் விசாரணையில் கூறி உள்ளேனா என்றால் கூறி உள்ளேன்.

போலிசார் எதிரியின் வீட்டிற்கு சென்றார்களா என்றால் தெரியவில்லை. போலிசார் என் வீட்டிற்கு வந்தார்களா என்றால் இல்லை, கோவிலுக்குதான் வந்தார்கள். புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் சுமார் 10 வருடத்திற்கு முன்னர் அவர்கள் தொழில் செய்தார்கள் என்றும் 10 வருடத்திற்கு முன்னர் எதிரியின் மனைவி இறந்தார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரி. எதிரி மஞ்சள் துண்டு கட்டிக்கொண்டு ரத்தக்கறை படிந்த அருவாளுடன் போனார் என்று புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன்.

நானும் என் மாமாவும் ஆண்கள் பொது கழிப்பிடத்திற்கே போகவில்லை என்றால் சரியல்ல. தினமும் 10.30 மணிக்குதான் ஆண்கள் பொது கழிப்பிடத்திற்கு செல்வோம் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று மட்டும்தான் 10.30 மணிக்கு சென்றோம். எதிரியை காவல்நிலையத்தில் எத்தனை மணிக்கு பார்த்தேன் என்றால் நான் அவரை பார்க்கவில்லை. அடுத்த நாள் எதிரியை கைது செய்துவிட்டதாக செய்திதாளிலும், பாலிமர் டிவியிலும் வந்தது என்றால் சரி.

ஆய்வாளர் சேலம் அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு வந்தார் என்றால் நான் 7.30 மணிக்கு சென்றேன். ஆய்வாளர் 8.00 மணிக்கு வந்தார். என் அப்பாவின் பிரேதத்தை இறுதி சடங்கு செய்வதற்காக எத்தனை மணிக்கு ஆய்வாளர் கொடுத்தார் என்றால் 2.00 மணிக்கு கொடுத்தார். அதன்பிறகுதான் இறுதி சடங்கு செய்தோம் என்றால் சரி. அதுவரை ஆய்வாளர் இருந்தார் என்றால் சரி. எனக்கும்

எதிரிக்கும் எத்தனை நாட்களாக பேச்சுவார்த்தையில்லை என்றால் 10 வருடமாக பேச்சுவார்த்தையில்லை. அந்த டிராக்டர் வண்டியினால்தான் பிரச்சனை வந்தது என்றால் சரி. என் அப்பா கோவிலில் பூசாரியாக இருந்த சமயத்தில் கோவில் சம்மந்தப்பட்ட கணக்குகளை ஊர் பொது மக்களுக்கு காட்டால் இருந்து வந்தார் என்றும், அதனால் ஊர் பொது மக்களுக்கும் என் அப்பாவிற்கும் விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. மேல்மலையனூர் அங்காள அம்மன் பரமேஸ்வரி கோவிலுக்கு வெளியூரில் இருந்த பக்தர்களை சேர்த்து 20 பஸ்களில் விசேச காலங்களில் என் அப்பா சென்று வருவார் என்றால் சரி. தற்போது நான் அவ்வாறு பக்தர்களை கூட்டிச்செல்கிறேன் என்றால் சரி. மேல்மலையனூர் அங்காள அம்மன் பரமேஸ்வரி கோவிலுக்கு பக்தர்களை அழைத்து சென்றதிலும் என் அப்பாவிற்கும் ஊர் மக்களுக்கும் பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. என் அப்பா பேய் ஓட்டுவதால் இரவு நேரங்களில் கோவிலில் தங்கியிருந்தார் என்றும் அப்போது பெண்களிடம் தவறாக நடந்தார் என்று பஞ்சாயத்து நடந்தது என்றால் சரியல்ல.

என் அப்பாவிற்கும் எதிரிக்கும் விரோதம் இல்லை என்றும் டிராக்டர் வாங்கியது சம்மந்தமாக எனக்கும் எதிரிக்கும் தான் விரோதம் என்றால் என் அப்பாவிற்கும் எதிரிக்கும் விரோதம் உண்டு. டிராக்டர் வாங்கிய பணத்தை நான் எதிரிக்கு கொடுக்கவில்லை என்பதால் ஏற்பட்ட விரோதத்தால் அந்த பணத்தை ஏமாற்றும் நோக்கத்துடன் என் தகப்பனார் வேறு ஒரு நோக்கத்தில் கொலை செய்யப்பட்டதை மறைத்து

எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு டிராக்டர் பணத்தை நான் கொடுத்துவிட்டேன். எதிரிக்கும் என் அப்பாவின் கொலைக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. கடைசி வரை என் அப்பாவும் எதிரியும் அனைத்து விசேசத்திற்கும் ஒன்றாக சென்று வந்தார்கள் என்றால் சரியல்ல.

சா.பொ.1 கொடுவாள் எல்லா இரும்பு கடைகளிலும் கிடைக்கும் என்றால் சரி. சா.பொ.2 துண்டு எல்லா கடைகளிலும் கிடைக்கும் என்றால் சரி. தெரு விளக்கு வெளிச்சத்தில் எங்கே இருந்து நான் பார்த்தேன் என்றால் பக்கமாகதான் பார்த்தேன். இந்த சங்கதியை நான் புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். மஞ்சள் துண்டுடன் எதிரி போனார் என்று நான் புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். நான் பொய்யாக எதிரி மீது புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.